<u>பிவா.சா 3 காளிமுத்து .O.S.No. 2 /2009</u> 08.03.2023

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

நான் நக்கமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நக்கமங்கலத்திற்கும், தைலாகுளத்திற்கும் இடையே 3 கிமி இருக்கும் என்றால் சரிதான். வாதிகளின் தாத்தா பெயர் திருவுதேவர் என்றால் சரிதான். திருவுதேவருடைய வாரிசுகள் அவர்களுக்குள் 07.12.1988ம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை அடமானம் பெறும்போது சொத்தினுடைய உரிமையை விசாரித்து தெரிந்து கொண்டுதான் அடமானம் பெற்றேன். திருவுதேவருடைய வாரிசுகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் முத்து வெங்கடராயபுரத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்திற்கு கம்மா பாசனமும் உண்டு கிணற்று பாசனமும் உண்டு. அந்த சொத்தை நான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதற்கு அடங்கல் கணக்கு உள்ளது. அது 2போகம் விளையும் என்றால் சரிதான். தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து அடமானம் வாங்கும் சமயத்தில் இந்த சொத்துக்களில் வாதிகளுக்கு உரிமை உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். ஆனால் அவர்கள் மைனர். எனக்கு 1ம் பிரதிவாதி அடமானம் எழுதி கொடுத்த காலகட்டம் வரை தி.காளிமுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. தரிசாக கிடந்தது. அசல் வழக்கு எண். 172/2008, என்ற வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களையும் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களிலும் விவசாயம் தான் நடந்து வந்தது என்றாலும் நான் தரிசாக இருந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டுதான் படித்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி விவசாயத்தை தவிர வேறு என்ன

தொழில் செய்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சீட்டு தொழில் செய்து வந்தார் என்றால் தவறு. பிவாசாஆ12, 13 அடமான பத்திரத்தில் வாதிகளுக்காகவும் எழுதி கொடுத்ததாக வாசகம் இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ12,13 அடமான பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் வாதிகள் தாக்கல் செய்த வழக்கு மொத்தம் 26 அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அடமான பத்திரத்தில் எத்தனை சர்வே எண்ணில் உள்ள நிலங்கள் அடமானமாக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிவாசாஆ12, 13 ஆகியவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிவாசாஆ22 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரை அடமானம் வைத்தது சம்பந்தமாக வாதிகளுக்கு எந்த நோட்டிசும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ15 கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்த முத்திரை தாளை யார் விற்பனை செய்தார் யார் வாங்கினார் எந்த தேதியில் விற்பனை செய்தார்கள் என்ற விபரங்களை அந்த விற்பனையாளரை விசாரித்தால் தான் தெரிய வரும் என்றால் விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. பிவாசாஆ15 கிரைய ஒப்பந்த பத்திரம் வாதிகளையும் சேர்த்து எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமை இல்லாத காரணத்தினால் அவர் அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தை எழுதி கொடுக்க தகுதி இல்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ15 கிரைய ஒப்பந்தம் வாதிகளுடைய உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிவாசாஆ16, 17, 18 ல் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ16, 17, 18 சம்பந்தமாக வாதிகளுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிவாசாஆ15 கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ12, 13, 15 ஆகிய

ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள தொகைகள் வாதிகளால் அனுபவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த தொகைகள் பொது குடும்ப நன்மைக்காகவோ, வாதிகளுடைய நன்மைக்காகவோ பெறப்படவில்லை என்றால் சரியல்ல.